**சுருக்கம்**

பள்ளிக்கல்வி-2005-2006ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டம்-100 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 200 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலமொழி ஆய்வகம் நிறுவுதல் - ஆணை வெளியிடப்படுகிறது.


---

**பள்ளிக் கல்வித் (இ2) துறை**

அரசு ஆணை (நிலை) எண். 83,
நாள் 16.5.2005

படிக்கப்பட்டவை:

இயக்குநர், பாள்ளிக்கல்வித்துறை, சென்னை கடிதம் ந.க.எண்.94479/பிடி1/2004 நாள் 6.1.2005.

*****

ஆணை:

தேர்வு வாரியத்தின் பகுப்பாய்வின் பொது தேர்வுகளில் தோல்வி அடைந்த மாணவர்களில் கணிசமான மாணவர்கள் ஆங்கிலம் பயிற்று மொழியின் காரணமாகவே தோல்வி அடைகிறார்கள் என்று தெரியவருகிறது. மேலும், இந்த பகுத்தாய்வின்படி நகர்புறத்தில் உள்ள மாணவர்களை விட கிராமப்புற மாணவர்கள் ஆங்கில பாடத்தில் தோல்வி அடைந்துள்ளார்கள் என்பதும் தெரிகிறது. சமீபகாலங்களில், பெரும்பாலான ஆங்கில மொழி பயிற்று ஆசிரியர்கள் தங்களது பயிற்றுவிப்பு தொழிலில் முன்னேற்றம் அடைவதற்கு எந்த பணியிடை பயிற்சியும் பெறவில்லை. நன்கு அமைக்கப்பட்ட பயிற்றுமொழி ஆய்வுக்கூடம் வழியாக மொழிபயிற்று ஆசிரியர்கள் அவர்களது பயிற்றுவிப்பு திறனை மேம்படுத்துவதற்கு அவர்களுக்கு தனி பயிற்சி அளிக்க வேண்டும். இந்த பயிற்று மொழி ஆய்வுக்கூடம் மூலம் உறுதியாக தேர்வில் தோல்வி அடைபவர்களின் எண்ணிக்கையை கணிசமாக குறைக்கலாம். மேலும் மாணவர்களின் கேட்கும், புரிந்துகொள்ளும், உணரும் மற்றும் பேசும் திறனை வெளிப்படுத்த முடியும். இந்த வசதியின் மூலம் மாணவர்களின் ஏற்ற இறக்கத்தோடு உச்சரிக்கும் திறனை மேம்படுத்திக் கொள்ள முடியும். இந்த பயிற்று மொழி ஆய்வுக்கூடம் எல்லா வசதிகளையும் பெற்று இருக்க வேண்டும். ஆகையால், 2005-2006ம் ஆண்டில் 100 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 200 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பயிற்றுமொழி ஆய்வுக் கூடங்கள் அமைக்கலாம் என திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காகும் மொத்த செலவு

ரூபாய்.150.00 இலட்சம். எனவே, ரூ.150.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு 2005-2006 ஆம் ஆண்டின் பகுதி II திட்டத்தின் கீழ் வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. மேலே பத்தி-1இல் உள்ள பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து, 2005-2006ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ், 100 அரசு உயர்நிலை பள்ளி மற்றும் 200 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில மொழி ஆய்வகம் நிறுவுவதற்கு ரூ.1,50,00,000/-(ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) தொடராச் செலவினம் ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி-2இல் உள்ள செலவினை செய்ய கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்.

"2202-பொதுக்கல்வி 02 இடைநிலைக்கல்வி-109 அரசு இடைநிலைப்பள்ளிகள்-KA மொழி பயிற்றுவிக்கும் ஆய்வுக்கூடங்கள் ஏற்படுத்துதல் 19 இயந்திரமும் சாதனமும் 01. வாங்குதல் (த.தொ.கு.2202-02 109 KA 1910)"

4.இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.22105/Edn-II/2005, நாள் 25.4.2005-ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கிரிஜா வைத்தியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை 6.
மாநிலக்கணக்காயர், சென்னை 18.
மாநிலக்கணக்காயர், சென்னை 18 (பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-79
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-35.
அனைத்து கருவூல அலுவலர்கள்.

நகல்:

நிதி (கல்வி II / BG) துறை, சென்னை 9.
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை 9
மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை 9.
பள்ளிக்கல்வி (பட்ஜெட்) துறை,சென்னை 9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.